கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 129 | 14-11-2025 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 129 | 14-11-2025 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## பீகாரை தொடர்ந்து பிரதமர் மோடி தமிழகம் வருகை: பா.ஜ.க.வினர் உற்சாகம்



பிரதமர் மோடி கடைசியாக கடந்த ஜூலை மாதம் தூத்துக்குடி மற்றும் அரியலூர் மாவட்டங்களுக்கு வருகை தந்தார்.3 மாத இடைவெளிக்கு பிறகு மீண்டும் மோடி வருகிற 19 ந் தேதி தமிழகம் வருகை தர உள்ளார். கோவையில் தென்னிந்திய இயற்கை வேளாண் கூட்டமைப்பு சார்பில் இயற்கை விவசாயம் குறித்த மாநாடு 19 ந் தேதி தொடங்கி 21ந் தேதி வரை 3 நாட்கள் நடக்கிறது.இந்த மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைக்க உள்ளார். இந்த தகவலை தென்னிந்திய இயற்கை வேளாண் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பி.ஆர். பாண்டியன் தெரிவித்தார். மாநாட்டை தொடங்கி வைப்பதற்காக பிரதமர் மோடி 19 ந் தேதி கர்நாடக மாநிலம் புட்டபர்த்தியில் இருந்து தனி விமானம் மூலம் கோவை வருகிறார். அன்று மதியம் கொடிசியாவில் நடைபெறும் விவசாயிகள் மாநாட்டில் கலந்து கொள்கிறார். மாநாட்டில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொள்கிறார்கள். 50 இயற்கை வேளாண் விஞ்ஞானிகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாட உள்ளார்.சுமார் ஒரு மணி நேரம் இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்க உள்ளார். இந்த ஒரு நிகழ்ச்சியில் மட்டுமே மோடி பங்கேற்க உள்ளதாகவும், அதன்பிறகு கோவையில் இருந்து டெல்லி புறப்பட்டு செல்ல உள்ளதாகவும் கூறப்படுகிறது. மாநாடு முடிந்து தமிழகத்தைச் சேர்ந்த பா.ஜ.க. நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்களை மோடி சந்தித்து பேச வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.பிரதமர் மோடியின் தற்போதைய தமிழக பயணம் பா.ஜ.க.வினர் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. பீகார் மாநிலத்தில் இரு கட்டங்களாக சட்டசபைத் தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு சாதகமாக தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் வெளியாகி உள்ளன. இதனால் பா.ஜ.க.வினர் உற்சாகத்தில் உள்ளனர். மீண்டும் பீகாரில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமையும் பட்சத்தில், அது அடுத்தடுத்த தேர்தல்களில் எதிரொலிக்கும் என்று அக்கட்சியினர் நம்புகின்றனர்.பீகார் தேர்தல் முடிவடைந்த சூழலில், பா.ஜ.க.வின் பார்வை அடுத்து தேர்தல் நடைபெற உள்ள தமிழகம் பக்கம் திரும்பி இருக்கிறது. இந்தநிலையில் மோடி வருகை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இனி வரும் காலங்களில் பிரதமர் மோடி மற்றும் மத்திய அமைச்சர் அமித்ஷாவின் பயணம் தமிழகத்தில் தொடரும் என பா.ஜ.க.வினர் தெரிவித்துள்ளனர். பிரதமர் மோடி வருகை தொடர்பாக போலீசாரிடம் கேட்டபோது இதுவரை தங்களுக்கு முறையான அறிவிப்பு எதுவும் வரவில்லை எனவும், அறிவிப்பு வந்தால் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் எனவும் கூறினர்.",

## தமிழக அரசு ஊழியர்களுக்கு 3% அகவிலைப்படி உயர்வு: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு





சென்னை: தமிழக அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 55 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து வெளியிடப்பட்ட அரசு செய்திக் குறிப்பில், "தமிழ்நாட்டு மக்கள் நலனில் அன்பும் அக்கறையும் கொண்டு பல சீரிய முன்னோடி நலத் திட்டங்களைத் தீட்டி தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. மக்களுக்காக வகுக்கப்படும் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டுவதிலும், அத்திட்டங்களை முழுமையாக மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் களப்பணியாற்றுவதிலும் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள்.

அத்தகைய அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இவ்வரசு கருத்தில் கொண்டு, மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில், முதல்வர் ஸ்டாலின் 01.07.2025 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் ஒன்றிய அரசு அறிவித்துள்ள அகவிலைப்படிக்கு இணையாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார். இதனால் தற்போது 55 சதவீதமாக உள்ள அகவிலைப்படி, 3சதவீதம் உயர்த்தப்பட்டு 01.07.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலு வலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூபாய் 1829 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். அரசு அலுவலர்கள்/ ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேகதாது அணை கட்ட திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடகாவுக்கு சுப்ரீம் கோர்ட்டு அனுமதி",



புதுடெல்லி, நவ.14–

மேகதாது அணை கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கக் கோரி கர்நாடக அரசு தொடர்ந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது "மேகதாது அணை கட்டப்பட்டால் லட்சக்கணக்கான விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். அணைக்கான திட்ட அறிக்கை தயாரிக்க மத்திய நீர் ஆணையம் எந்த அனுமதியும் வழங்க இயலாது" என தமிழ்நாடு அரசு தரப்பில் வாதிடப் பட்டது. மேலும், "காவிரியின் குறுக்கே போதுமான அணைகள் கர்நாடகாவில் உள்ளன. புதிய அணை தேவையில்லை" எனவும் வாதம் முன்வைக்கப் பட்டது. தொடர்ந்து அணை கட்டும் கர்நாடக அரசின் முடிவுக்கு புதுச்சேரி, கேரள அரசும் நீதிமன்றத்தில் எதிர்ப்பு தெரிவித்தது. இதனையடுத்து மேகதாது அணை கட்டுவதற்கு திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடக அரசுக்கு தலைமை நீதிபதி அமர்வு அனுமதி அளித்து உத்தரவிட்டது. மேலும் மேகதாது அணை கட்டுமானத்திற்கு திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடகா அனுமதி கோருவதை எதிர்த்து தமிழ்நாடு கூறும் அம்சங்கள் அனைத்தும் மிகவும் ஆரம்ப கட்டமானது. எனவே, திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய நீர் ஆணையத்திடம் வழங்கும் போது, தமிழ்நாடு அரசு, காவிரி மேலாண்மை ஆணையம், ஒழுங்காற்றுக் குழு ஆகியவற்றிடம் கருத்து கேட்ட பிறகே முடிவு எடுக்க வேண்டும். காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பிக்கும் உத்தரவுகளை கர்நாடகா உள்ளிட்ட அனைத்து மாநில அரசுகளும் முழுமையாக கடைபிடிக்க வேண்டும் எனவும் தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது. தொடர்ந்து சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின்படி தமிழ்நாட்டுக்கு உரிய தண்ணீரை வழங்கவில்லை என்றால் அது நீதிமன்ற அவமதிப்பாகும் என்பதை தெளிவுபடுத்துகிறோம் என்றும் மேகதாது தொடர்பாக தற்போது சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து மனுக்களும் முடித்து வைக்கப்படுகின்றன என தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது. முன்னதாக மேகதாது அணை திட்டம் தமிழகத்தை பாதிக்காது என்றும் காவிரி நீரை திறந்து விடுவதில் சமநிலைப்படுத்தும் நோக்கில் மேகதாதுவில் புதிதாக அணை கட்ட முடிவு செய்யப்பட்டு உள்ளது என்றும் கர்நாடக முதல்மந்திரி சித்தராமையா கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.",

## சென்னையில் விதிகளை மீறி ஆளுங்கட்சியினர் கொடிகளை பறக்கவிட்டதை வீடியோ எடுத்துள்ளேன்: நீதிபதி குற்றச்சாட்டு



சென்னை: நவ.14–

சென்னை அண்ணா மேம்பாலத்தில் விதிகளை மீறி ஆளுங்கட்சியினரே கொடிகளை போக்குவரத்துக்கு இடையூறாக பறக்கவிட்டதை தானே வீடியோ எடுத்துள்ளதாக உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.கே.இளந்திரையன் பகிரங்கமாக குற்றம்சாட்டினார்.

மதுரை கொடிக்குளத்தைச் சேர்ந்த அமாவாசை தேவர் என்பவர் மதுரை விளாங்குடி பகுதியில் அதிமுக கொடிக்கம்பம் அமைக்க அனுமதி கோரி உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.கே. இளந்திரையன், "பொது இடங்கள், சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான இடங்களில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள அனைத்து கொடிக் கம்பங்களையும் கடந்த ஏப்.28க்குள் அகற்ற உத்தரவிட்டிருந்தார்.

மேலும் கொடிக் கம்பங்களை போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் தங்களுக்கு சொந்தமான இடங்களில் வைத்துக்கொள்ளலாம் என்றும், அரசியல் கட்சிகளின் சார்பில் சாலைகளின் நடுவே உள்ள சென்டர் மீடியன்கள், பாலங்களில் கொடிக்கம்பங் களை நட அனுமதிக்கக்கூடாது, பொதுக்கூட்டங்களின் போது சாலையோரங்களில் நடப்படும் ஒவ்வொரு கொடிக்கம்பத்துக்கும் தலா ரூ.1000 கட்டணம் வசூலிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டு இருந்தார்.

இந்நிலையில் சட்டவிரோதமாக சாலையோரங்களில் வைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பங்களை அகற்றுவது தொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பாக நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் ஜெ. ரவீந்திரன், கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் இ.ராஜ் திலக் ஆகியோர் ஆஜராகி, கொடிக்கம்பம் விவகாரத்தில் வழிகாட்டு நெறிமுறை உருவாக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக மாவட்ட வாரியாக அறிக்கை கோரியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அதற்கு நீதிபதி ஜி.கே.இளந்திரையன், ''கொடிக்கம்பங்கள் விவகாரத்தில் வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கியுள்ள தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவிக்கிறேன். அதேநேரம் சாலைகளின் சென்டர் மீடியன்களில், கொடிக்கம்பங்களை நடக்கூடாது என உத்தரவிட்டும், எந்த கட்சியும் அந்த உத்தரவை மதித்து நடப்பதில்லை. தமிழக அரசும் அந்த உத்தரவை அமல்படுத்தவில்லை. சென்னை அண்ணா மேம்பாலத்தில் விதிகளை மீறி ஆளுங்கட்சியினரே கொடிகளை போக்குவரத்துக்கு இடையூறாக பறக்கவிட்டதை நானே அவ்வழியாக வாகனத்தில் செல்லும்போது வீடியோ எடுத்துள்ளேன் என பகிரங்கமாக குற்றம்சாட்டினார்.

அதைத் தொடர்ந்து, அனுமதியின்றி சட்டவிரோதமாக சாலைகளின் நடுவே கொடிகளை அமைத்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அனுமதியின்றி பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பங்களை அகற்றியது தொடர்பாக மாவட்ட வாரியாக அறிக்கை தாக்கல் செய்ய அவகாசம் வழங்க வேண்டும் என்றும் அரசு தரப்பில் கோரப்பட்டது.


அதையடுத்து நீதிபதி, இந்த விவகாரத்தில் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுகள் மீறப்பட்டால் தாமாக முன்வந்து அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப் படும் என எச்சரித்தார். பின்னர் இது தொடர்பாக மாவட்டம் வாரியாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விரிவான தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை டிச.3க்கு தள்ளி வைத்தார்.

## தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். கணக்கீட்டு படிவங்கள் 81% விநியோகம்: தேர்தல் ஆணையம் அறிவிப்பு

சென்னை: நவ.14–

தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். கணக்கீட்டு படிவங்கள் 81% விநியோகம் செய்யப்பட்டுள்ளன என தேர்தல் ஆணையம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை 5,21,73,087 வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்கள் தரப்பட்டுள்ளன என தேர்தல் ஆணையம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமையை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்



சென்னை: நவ.14–

மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமையை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில், தமிழ்நாட்டின் ஜீவநதி காவிரி. காவிரி நதி நீரை நம்பித்தான் டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் இருக்கிறது. மேலும் 20 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும் இருக்கிறது. கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க இன்றைய தினம் உச்சநீதிமன்ற அனுமதி அளித்துள்ளது மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது.

மேகதாதுவில் அணை கட்டப்பட்டால், காவிரியில் உள்ள நம் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்படும் என்று ஏற்கனவே அதிமுக சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது. காவிரி மேலாண்மை ஆணையத்தின் 28 ஆவது கூட்டம் டெல்லியில் 1.2.2024 அன்று நடைபெற்றபோது கூட்டத்தின் விவாதப் பொருளில் மேகதாது அணை விவகாரத்தை காவிரி ஒழுங்காற்றுக் குழுவில் கர்நாடகம் கோரியபோதே, நான் கண்டித்துள்ளேன். தமிழகத்தின் உரிமையை மீட்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேசிய முற்போக்கு திராவிட கழகம் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது





திருச்சி, நவ. 14–

தேசிய முற்போக்கு திராவிட கழகம் திருச்சி தெற்கு மாவட்டம் ஸ்ரீரங்கம் பகுதி கழகத்தை பிரிப்பது குறித்தும் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் BLA-2 முகவர்கள் ஐந்து பேர் கொண்ட பூத் கமிட்டி உறுப்பினர்கள் பணி யாற்றுவது குறித்தும் ஜனவரி 9, கடலூர் மாநாடு செல்வது குறித்தும் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஸ்ரீரங்கம் சார்பாக திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் ஆர் பாரதிதாசன் மாத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் ஸ்ரீரங்கம் பஸ் ஸ்டாண்ட் அருகில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழகத் துணைச் செயலாளரும் டெல்டா மண்டல பொறுப்பாளருமான முன்னால் எம்.எல். ஏ .செந்தில் குமார் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் சதீஷ்குமார் வரவேற்புரை ஆற்றினார், மாவட்ட அவைத் தலைவர் ஒன்றிய கவுன்சிலர் பி அர்ஜுன் மாவட்டக் கழக துணை செயலாளர் டி நீலமேகம், பகுதி கழக அவை தலைவர் பாலாஜி, வட்ட கழக செயலாளர்கள் சுரேஷ், ரங்கராஜ், ரங்கன், பாஸ்கர், ரவிச்சந்திரன், வடமலை மற்றும் ஸ்ரீரங்கம் பகுதி கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர் முடிவில் கழக மாற்றுத்திறனாளி அணி துணைச் செயலாளர் சி.வாஞ்சி குமரவேல் நன்றியுரை வழங்கினார்.

## கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்: காயம் அடைந்த மேலும் 4 பேர் சிபிஐ விசாரணைக்கு ஆஜர்

கரூர், நவ.14–

கரூரில் கடந்த செப்டம்பர் மாதம் 27 ந்தேதி த.வெ.க பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இந்த வழக்கு தொடர்பாக சிபிஐ அதிகாரிகள் தாந்தோணிமலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் தங்கி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை 20க்கும் மேற்பட்ட பொதுமக்கள், போலீசார், ஆம்புலன்ஸ் உரிமையாளர்கள் மற்றும் டிரைவர்கள், மத்திய மின்துறை அதிகாரிகள் ஆகியோரிடம் விசாரணை நடத்தினர். கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்த 5 பேர் நேற்று முன்தினம் ஆஜராகி விளக்கம் அளித்தனர். 2வது நாளானநேற்றும்காயம்அடைந்தவர்களிடம் விசாரணை நடந்தது. ஏமூர்புதூர், ராமா கவுண்டனூர், சுக்காலியூர் பகுதிகளை சேர்ந்தவர்கள் உள்பட 6 பேர் ஆஜராகி தங்களது விளக்கத்தை அளித்தனர். இந்த நிலையில், இன்று 3வது நாளாக கூட்ட நெரிசலில் சிக்கி காயம் அடைந்த மேலும் 4 பேர்சிபிஐவிசாரணைக்குஆஜராகியுள்ளனர். அவர்களிடம்சிபிஐஅதிகாரிகள்விசாரணை நடத்தி வருகின்றனர். “,

## தமிழ்நாடு, இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி சார்பில் பேரிடர் மேலாண்மைப் பயிற்சி




இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி சென்னை தலையகத்தில் பேரிடர் மேலாண்மை பயிற்சி மாநிலப் பொதுச் செயலர் திரு.கே. வேதவியாஸ் தலைமையில் 11.11.2025 மற்றும் 12 .11.2025 ஆகிய இரு தினங்கள் நடைபெற்றது. இதில் பங்கேற்ற முதலுதவிப் பயிற்சி, பேரிடர் கால தற்காப்பு மற்றும் மீட்பு . பணிகள் போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இதில் ,விழுப்புரம் மாவட்டக் கன்வீனர் முனைவர். ம. பாபு செலவதுரை அவர்கள் பேரிடர் மீட்பு பணிகள் சார்ந்த செயல் அறிக்கை தயாரிக்கும் வழிமுறைகள் விளக்கினார். அப்போது

2004 2005 யில் சுனாமி பாதிப்பின் போது கல்வித்துறைக்கு தான் சமர்ப்பித்த செயல் ஆய்வு அறிக்கை(Action Research Report) தலைப்புகளாக

* பிரச்சனையை அடையாளம் காணல்
* பிரச்சனையை வரையறுத்தல்
* பொருளாதாரப் பிரச்சனைகள்
* கல்வி பெருவதில் பிரச்சனைகள்
* பிரச்சனைக்கான உத்தேசக்காரணங்கள் .
* உத்தேசத் தீரவுகளை ஆய்ந்தறிதல்
* நடைமுறைக்கு சாத்தியமான தீர்வுகளைத் தேர்ந்தெடுத்தல்
* தேர்ந்தெடுத்த தீர்வினை நடைமுறைப்படுத்துதல் .
* முடிவுகளைப் பகுப்பாய்தல்
* நடைமுறைபடுத்தியவை நெடுநேரக்கு பார்வை .
* சான்றுகள்
* அறிக்கை அளித்தல் .

ஆகிய தலைப்புகளை விளக்கி பயிற்சியாளர்களுக்கு வழங்கி விளக்கினார் . இதில் மாநில பேரிடர் பயிற்சியாளர்கள் திரு. பெஞ்சமின், பெலிட் சுதர். சாந்தகுமார் ஆகியோர் பயிற்சியளித்தனர். இந்த மாநில அளவிலான பயிற்சியில் தமிழ்நாடு முழுவதுமுள்ள பல்வேறு மாவட்ட ரெட் கிராஸ் கிளை நிர்வாகிகள் ஜே.ஆர்.சி. கன்வீனர்கள் பயிற்சி பெற்றனர். பங்கேற்றவர்களுக்கு சான்றினை மாநிலப் பொதுச்செயலர் திரு. கே. வேதவியாஸ் அவர்கள் வழங்கி வாழ்தினார்.

## கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை சார்பில் கோவை வீரியம்பாளையத்தில் 2.18 கோடி மதிப்பீட்டில் புதிய மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடம் திறப்புவிழா




கோவை நவ:14

முன்னணி பல்துறை மருத்துவமனையாக விளங்கும் கே.எம்.சி. ஹெச் தனது சமூக கடமைகளில் (சிஷிஸி) ஒரு பகுதியாக வீரியம் பாளையத்தில் செயல் பட்டு வரும் மாநகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடத்தை கட்டிக்கொடுத்துள்ளது.

அரசு பள்ளி மாணவர் களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன்

ரூ. 2 கோடியே 18 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள இக்கட்டிடத்தில் 7 வகுப்பறைகள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு தனி தனியே கழிவறைகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் நல்லா ஜி பழனிசாமி தாம் வசிக்கும் வீரியம்பாளையம் அரசு பள்ளி மாணவர்களின் முன்னேற்றத்திற்கு உதவிடும் வகையில் தொடர்ந்து சமூக சேவைகள் ஆற்றி வருகிறார். அதன் அடிப்படையில் சில வருடங்களுக்கு முன்னர் இதே பகுதிக்கு பல உதவிகள் செய்துள்ளார்.

இந்த புதிய பள்ளிக் கட்டிடத்தின் திறப்பு விழா நடைபெற்றது. கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப. ராஜ்குமார் புதிய பள்ளிக் கட்டிடத்தை திறந்து வைத்தார். கோவை மாநகராட்சி மேயர் கா. ரங்கநாயகி ராமசந்திரன், கோவை மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் மற்றும் கோவை மாநகராட்சி துணை மேயர் ரா. வெற்றிசெல்வன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் நல்லா ஜி பழனிசாமி, துணை தலைவர் டாக்டர் தவமணி பழனிசாமி மற்றும் செயல் இயக்குனர் டாக்டர் அருண் பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் உரையாற்றிய டாக்டர் நல்லா ஜி.பழனிசாமி, கல்வி மற்றும் சமூக முன்னேற்றப் பணிகளில் கே.எம்.சி.ஹெச் தொடர்ந்து அக்கறையுடன் பல்வேறு முயற்சிகள் எடுத்துவருகிறது.

அதில் சமீபத்தில் கோவை மாவட்டம் வடமதுரை மற்றும் கழிக்கநாயகன் பாளையம் ஊராட்சி பகுதியில் ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளிக்கட்டிடம், ஈரோடு மாவட்டம் நல்லாம்பட்டியில் ரூ. 2 கோடியே 11இலட்சம் மதிப்பில் புதிய பள்ளிக்கட்டிடம், கோவை மாவட்டத்தில் அமையவுள்ள உலகத்தர கிரிக்கெட் மைதானத்திற்கு ரூ. 1கோடி நிதிஉதவியும் வழங்கப்பட்டுள்ளது

என்றும் இம்முறையான சமூக பணிகள் செய்வதன் மூலம் மாணவர்கள் தரமான கல்வி பெறுவதற்கும் முன்னேற்றத்திற்கும் உதவிகரமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

## தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட 3 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல்!!

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட 3 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளித்துள்ளார். உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகிக்க நியமித்த அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டிக்கும் மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சிகள் 5ம் திருத்தச் சட்ட முன்வடிவுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளித்துள்ளார். உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரிகளின் பதவிக் காலத்தை மேலும் 6 மாதம் நீட்டிக்கும் மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 9 மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்த நிலையில் தற்போது 3 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

## உயர் கல்வி பயிலும் 29 மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கினார் அமைச்சர் அன்பில் மகேஸ்

சென்னை: நவ.14–

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிப்ட் (NIFT பெங்களூரு) மற்றும் RIE மைசூரில் உயர் கல்வி பயிலும் 29 மாணவர்களைச் சந்தித்து கலந்துரையாடி, மடிக்கணினிகளை வழங்கினார். தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் கல்வி பயின்ற 2025ஆம் ஆண்டை சேர்ந்த 29 மாணவர்கள் தற்போது முன்னணி கல்வி நிறுவனங்களான நிப்ட் (NIFT பெங்களூரு) மற்றும் ஸிமிணி மைசூரில் உயர் கல்வி பயின்று வருகின்றனர். பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிப்ட் கல்லூரிக்கு நேரில் சென்று மாணவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், தங்கள் கனவுகளை துணிச்சலாகவும் சிந்தனையை படைப்பாற்றலாகவும் வளர்க்குமாறு ஊக்கமளித்தார். மேலும், மாணவர்களின் கல்விப் பயணத்தை வலுப்படுத்தும் வகையில் மடிக்கணினிகளை வழங்கினார். இந்நிகழ்வில் NIFT(Bangalore) இயக்குநர் யாதிந்திரா, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா.சுதன் ஆகியோர் உடனிருந்தனர்.

## “நாய் கடித்து நெல்லை வாலிபர் பலி.. மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு பறந்த உத்தரவு”,

நெல்லை, நவ. 14–

நெல்லை மாவட்டம் வடக்கன்குளம் அருகே பழவூரை அடுத்த யாக்கோபுரம் சிதம்பரபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ராமசாமி. இவருடைய மகன் அய்யப்பன் (வயது 31). கூலி தொழிலாளி. இவருக்கு மனைவி மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர். கடந்த 3 மாதங்களுக்கு முன்பு அய்யப்பன் கூலி வேலைக்கு சென்றார். அப்போது தெருவில் சுற்றி திரிந்த வெறிநாய் திடீரென்று அவரை கடித்தது. எனினும் அவர் அதனை பொருட்படுத்தாமலும், உரிய சிகிச்சை பெறாமலும் வேலைக்கு சென்று வந்தார். கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு அய்யப்பனுக்கு திடீரென்று உடல்நலக்குறைவு ஏற்பட்டது. உடனே அவரை நாகர்கோவில் ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்து சிகிச்சை அளித்தனர். அவருக்கு மருத்துவ பரிசோதனை செய்ததில், வெறிநாய் கடித்ததில் ரேபிஸ் நோயால் பாதிக்கப்பட்டது தெரிய வந்தது. தொடர்ந்து அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனாலும் சிகிச்சை பலனின்றி நேற்று காலையில் அய்யப்பன் பரிதாபமாக உயிரிழந்தார். நாய் கடித்த வாலிபர் உரிய சிகிச்சை பெறாததால் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி இருந்தது. இந்நிலையில் ரேபிஸ் தாக்கி வாலிபர் உயிரிழந்தது தொடர்பாக முழு விசாரணை நடத்தி அறிக்கை அளிக்க மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு, சென்னை தலைமையகத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த அய்யப்பன், நாய் கடித்த பிறகு தடுப்பூசி செலுத்தாமல் இருந்ததற்கான காரணம்? வேறு ஏதும் பிரச்னையா? உள்ளிட்டவை குறித்து விசாரிப்பதற்காக அவரின் வீட்டாரிடம் சுகாதாரத்துறையினர் விசாரணை நடத்த உள்ளனர்.

## ஈரோடு சித்தோடு அரசு கல்லூரியில் தமிழ் மரபு நிகழ்ச்சி



ஈரோடு மாவட்டம் சித்தோட்டில் செயல்படும் அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற, மாபெரும் தமிழ் கனவு, தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்பரை நிகழ்ச்சியில் பங்கேற்ற கல்லூரி மாணவ, மாணவிகளின் தமிழ் பெருமைகள் குறித்த வாசிப்பு குறித்த தெளிவுரை வாசிப்பவர்கள் குறித்த, தெளிவுரை வழங்கியவர்கள் மற்றும் கேள்வி நாயகன், கேள்வி நாயகிகள் ஆகியோர்களுக்கு பாராட்டு தெரிவித்து புத்தகங்கள், பாராட்டு சான்றிதழ்கள் ஆகியவற்றை ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி வழங்கினார். உடன் சித்தோடு அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் சாரதா, சொற்பொழிவாளர் பத்மஶ்ரீ முனைவர் நர்த்தகி நடராஜன் ஆகியோர் உள்ளனர்.

## சர்வதேச அளவிலான சிலம்பப் போட்டியில் பதக்கங்களை வென்ற மாணவர்கள்!!!




கோவை நவ:14

இந்தோ நேபால் சர்வதேச அளவிலான சிலம்பப் போட்டியில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்ற மாணவர்களுக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு.

இது பற்றி பயிற்சி ஆசிரியர்கள் விஷ்ணு காந்த், சுரேந்திர பாண்டியன் ஆகியோர் கூறியதாவது :கடந்த 4 தேதி முதல் 8 தேதி வரை சர்வதேச போட்டிகள் நடைபெற்றது. இதில் தேசிய அளவில் பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்களும், இந்தியாவில் அளவில் பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றனர்.

அந்த வகையில் தமிழ்நாட்டில் சார்ந்த வாகை வீரன் சிலம்பம் தற்காப்பு கலை அறக்கட்டளை சார்பாக ஸர்வேஸ் கோபால், ஹேம்குமார், நித்தீஷ் பாண்டி, இஷால், லியோன் தேவ், யஸ்வந்த், ஶ்ரீ ஆகாஷ், விஷ்ணு பிரியா, ஆகிய மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சர்வேதேச அளவில் 6 தங்கப் பதக்கங்களையும், 2 வெள்ளிப் பதக்கங்களையும் வெற்றி வாகை சூடி இந்தியாவிற்கு பெருமை சேர்த்துள்ளனர். இந்த சர்வதேச அளவிலான போட்டிகளுக்கு பல்வேறு கட்டங்களாக போட்டியிட்டு தேர்வு செய்யப்பட்டு இன்று பதக்கங்களை பெற்றுள்ளனர். மேலும் இந்த விருதுக்கு உறுதுணையாக நின்ற மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என கூறினர்.

# மணப்பாறை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் தீவிர அவசர சிகிச்சைப் பிரிவுக்கு ரூ.20 கோடி மதிப்பில் புதிய கட்டிடம். அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டினார்.



திருச்சி, நவ. 14–

திருச்சி மாவட்டம், மணப்பாறையில் உள்ள பாரதியார் நகரில் காமராஜர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இங்கு தினசரி 2000 க்கும் மேற்பட்ட மருத்துவ பயனாளர்கள் மருத்துவ சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். அதே போல் விபத்து மற்றும் திடீர் உடல்நல்குறைவு போன்ற அவசர சிகிச்சைக்காகவும் மக்கள் வந்து சிகிச்சை பெற்று வரும் நிலையில் தற்போது அவசர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்த தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ள நிலையில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர அவசர சிகிச்சை பிரிவிற்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டும் பணி இன்று தொடங்கியது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு அடிக் கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். மேலும் கட்டிடத்திற்கான வரைபடத்தையும் அவர் பார்வையிட்டு கட்டுமானப்பணிகள் மற்றும் ஏற்படுத்தப்பட உள்ள உள்கட்டமைப்பு வசதிகள் குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீரங்கம் மொ.பழனியாண்டி, மணப்பாறை பஅப்துல் சமது, மாவட்ட ஆட்சியர் வே. சரவணன், நகர மன்ற தலைவர் கீதா ஆ மைக்கேல் ராஜ், ஒன்றிய செயலாளர் S.A.S. ஆரோக்கியசாமி, கவுன்சிலர் ராஜ், 15 வது வார்டு சத்தி, மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# அரியலூர மாவட்டத்தில் பெருந்திரள் பனை விதைகள் நடுதல் இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி துவக்கி வைத்தார்.

அரியலூர், நவ. 14–

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், வாலாஜாநகரம் கிராம ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 2025 26ன் கீழ் 2000 பனை விதைகள் நடுதல் இயக்கத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் இரத்தினசாமி ,பனை விதையினை நட்டு வைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாட்டின் மாநில மரமாகவும், தமிழர்களின் வாழ்வோடும், மொழியோடும் இயைந்த மரமாக விளங்கும் பனை மரங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் வகையிலும், தமிழ்நாட்டின் வனபரப்பினை அதிகரிக்கும் வகையிலும் அரியலூர் மாவட்டத்தினை பசுமை நிறைந்த மாவட்டமாக உருவாக்கும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் கடந்த செப்டம்பர் 2025 தொடங்கி இன்றையதினம் வரையில், அரியலூர் மாவட்ட அனைத்து கிராமங்கள் தோறும், ஏரி, குளங்கள், வரத்து வாரிகள், கிராமச்சாலைகளின் ஓரங்களில் ஊர் பொதுமக்கள், தன்னார்வலர்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பணியாற்றும் பணியாளர்கள், வனத்துறை, வேளாண்மை / தோட்டக்கலைத் துறை, உள்ளிட்ட கள அலுவலர்கள், களப்பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உள்ளிட்டோர்களை ஒருங்கிணைத்து தற்போது வரையில் 18,50,000 எண்ணிக்கையிலான பனை விதைகள் தொண்டறமாக நடவு செய்து மாநில அளவில் முதல் இடத்தை பிடித்துள்ளது.

அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் வாலாஜாநகரம் ஊராட்சி ஏரிக்கரையில் 2000 எண்ணிக்கையில் பெருந்திரள் பனை விதைகள் நடும் இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, பனை விதையினை நட்டு துவக்கி வைத்தார். மேலும், இயற்கையைப் பாதுகாப்பது, நிலத்தடி நீரை மேம்படுத்துவது, நீர் நிலைகளைப்பாதுகாப்பது, பல்லுயிர் பெருக்கத்தை உருவாக்குவது போன்ற பசுமையை நோக்கிய நெடும் பயணமாக அரியலூர் மாவட்டத்தில் பனை விதைகள் நடும் பணியானது தொடர்ந்து நடைபெறும் எனவும் தெரிவித்தார்.





இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.சிவராமன், உதவி திட்ட அலுவலர் (ஊ/வே) நந்தகோபால கிருட்டிணன், உதவி இயக்குநர் (ஊரட்சிகள்) பழனிசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முத்துக்குமரன், மலர்க் கண்ணன், வனச்சரகர் பழனிசாமி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையைச் சேர்ந்த களப் பணியாளர்களான மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பணி மேற்பார் வையாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், தூய்மை காவலர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டப் பணியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வாக்குச்சாவடி நிலை முகவர்களை நியமிப்பதற்கான மாற்றியமைக்கப்பட்ட அறிவுறுத்தல்: இந்திய தேர்தல் ஆணையம் வெளியீடு

சென்னை: நவ.14–

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட அறிக்கை: பொதுவாக, வாக்காளர் பட்டியலின் குறிப்பிட்ட பாகத்தில் பெயர் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் ஒரு வாக்குச்சாவடி நிலை முகவராக இருப்பார். இப்போது, வாக்காளர் பட்டியலின் குறிப்பிட்ட பாகத்தில் பெயர் பதிவு செய்த வாக்குச்சாவடி நிலை முகவர் கிடைக்காத பட்சத்தில், அதே சட்டமன்றத் தொகுதியில் பெயர் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு வாக் காளரும் வாக்குச்சாவடி நிலை முகவராக நியமிக்கப்படலாம். அவ்வாறு நியமிக்கப் பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர் தனது நியமிக்கப்பட்ட பகுதியின் வரைவு வாக்காளர் பட்டியலில், இறந்த அல்லது இடம் பெயர்ந்த வாக்காளர் களின் பதிவுகளை அடையாளம் காணும் பொருட்டு, ஆய்வு செய்வதற்கு முற்படுவர். தமிழ்நாட்டில், 211445 வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிகள் 2026 குறித்து வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களுடனான விழிப்புணர்வு கூட்டம்

## மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது.



சேலம், நவ.14–

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிகள் 2026 குறித்து வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுடனான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு பின் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரதிருத்த பணிகள் 2026 அக்டோபர் மாதம் 28 ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் கணக்கெடுப்பு பணிகள் சேலம் மாவட்டத்தில் நவம்பர் மாதம் 4 ம் தேதி முதல் டிசம்பர் 4 ம் தேதி வரையில் மேற்கொள் ளப்படவுள்ளன.

அதன்படி இன்றைய தினம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிகள் 2026 குறித்து வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுட னான விழிப்புணர்வு கூட்டம் நடத்தப் பட்டது. இக்கூட்டத்தில் வாக் காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிகள் குறித்து வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இன்றையதினம் இக்கூட்டம் நடத்தப்படுகிறது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிகள் 2026 விண்ணப்ப படிவம் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. அவ்வாறு வழங்கப்பட்ட விண்ணப்பங்களை எவ்வாறு பூர்த்திச் செய்து வழங்குவது குறித்தும், தேர்தல் ஆணையத்தின் வழிமுறைகள் உள்ளிட்டவைகள் குறித்து எடுத்துரைக் கப்பட்டுள்ளது. வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களுக்கு கணக்கீட்டுப்படிவத்தில் வாக்காளர்கள் நிரப்ப வேண்டிய விவரங்கள் குறித்தும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிகள் முக்கிய தேதிகள் குறித் தும், அதுதொடர்பான சந்தேகங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள் விவரங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ள வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களுக்கு தங்கள் வட்டார கிராமப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு தெரியப்படுத்தி அனைத்து வட்டார ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்களில் உதவி மையங்கள் ஏற்படுத்தி படிவத்தினை பூர்த்தி செய்திட உதவிபுரிய அறிவுறுத் தப்பட் டுள்ளது. எனவே பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன் படுத்தி கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உதவி ஆட்சியர் (பயிற்சி) விவேக் யாதவ்,இ.ஆ.ப., வேளாண்மை இணை இயக்குநர் திரு. சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ந.கமலம், தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் மஞ்சுளா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சேலத்தில் ஏமாற்றப்பட்ட பணத்தை மீட்டுத் தரக்கோரி ஆர்ப்பாட்டம்.



சேலம், நவ.14–

அறக்கட்டளை மூலம் முதலீடு பெற்று மோசடி செய்த பணத்தை மீட்டுத் தரக்கோரி, பாதிக்கப் பட்டோர் சேலம் கோட்டை மைதானத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சேலம் அம்மாப் பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் புனித அன்னை தெரசா மனிதநேய அறக் கட்டளையை விஜயபானு என்பவர் நடத்திவந்தார். இந்த அறக்கட்டளையில் பணத்தைஇரட்டிப்பாக்கி தருவதாக கூறியதை நம்பி, ஏராளமானோர் கோடிக்கணக்கில் முதலீடு செய்தனர்.

இந்நிறுவனம் தொடர்பாக எழுந்த புகாரை தொடர்ந்து, பொருளாதாரக் குற்றப்பிரிவு போலீஸார் கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருமண மண்டபத்தில் சோதனை நடத்தினர். அதில், ஆசைவார்த்தைகளை கூறி முறைகேடாக பொதுமக்களிடம் இருந்து பணம் பெறப்பட்டது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து, அறக் கட்டளை நிர்வாகிகளிடம் இருந்து பணம், தங்கம், வெள்ளி நகைகளை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

மேலும், முறைகேட்டில் ஈடுபட்ட விஜயபானு உள்ளிட்டோரை கைதுசெய்து, கோவை டான்பிட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். தற்போது விஜயபானு ஜாமீனில் வெளியே வந்துள்ளார்.

இந்நிலையில், அறக்கட்டளையில் பணம் முதலீடு செய்து பாதிக்கப்பட்ட 50க்கும் மேற்பட்டோர் சேலம் கோட்டை மைதானத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதில், புனித அன்னை தெரசா மனிதநேய அறக் கட்டளையில் முதலீடு செய்து பாதிக்கப்பட்ட வர்களில் 30க்கும் மேற்பட் டோர் உயிரிழந்துள்ளனர். அவர்கள் குடும்பத்தினர் பல்வேறு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். எனவே, முதலீடு செய்த பணத்தை பாதிக்கப்பட் டவர்களுக்கு திருப்பி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர்.

# கூலி உயர்வு தொடர்பாக பவர் டேபிள் உரிமையாளர்கள் வேலை நிறுத்த போராட்டம்!

திருப்பூர்: நவ.14–

திருப்பூரில் உள்நாட்டு பின்னலாடை உற்பத்தி நிறுவனங்களுக்கு , பவர் டேபிள் நிறுவனங்கள் ஜாப் ஒர்க் முறையில் பின்னலாடைகளை உற்பத்தி செய்து கொடுக்கின்றனர். 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உள்நாட்டு பனியன் உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் பவர் டேபிள் சங்கத்தினம் கூலி உயர்வு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். அதன்படி கடந்த 2022ஆம் ஆண்டு இரு சங்கத்தினர் இடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

இதில் பவர் டேபிள் நிறுவனங்களுக்கு முதல் ஆண்டு 17 சதவீத கூலி உயர்வும் , அடுத்து வரும் 3 ஆண்டுகளுக்கு தலா 7 சதவீதமும் வழங்க ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. ஆண்டுதோறும் இவை முறையாக பின்பற்றப்பட்டு வரக்கூடிய நிலையில் கடந்த ஜூன் 6ம் தேதி முதல் உயர்த்தப்பட வேண்டிய 7 சதவீத கூலி உயர்வு சில நிறுவனங்கள் வழங்கினாலும் ஒரு சில நிறுவனங்கள் வழங்காமல் கால நீட்டிப்பு செய்து வருவதால் ஜாப் ஒர்க் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் , உடனடியாக கூலி உயர்வை அமல்படுத்த வேண்டும் என கடந்த 7 ஆம் தேதி முதல் கூலி உயர்வு வழங்காத நிறுவனங்களில் இருந்து ஆர்டர்கள் எடுப்பதையும் , செய்து முடித்த ஆர்டர்கள் கொடுப்பதையும் நிறுத்தி வைத்தனர்.

இந்நிலையில், கூலி உயர்வு தொடர்பாக பவர் டேபிள் உரிமையாளர்கள் இன்று முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் திருப்பூர் குமரானந்தபுரம் பகுதியில் உள்ள பவர் டேபிள் நிறுவனம் தொழிலாளர்கள் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது.

# திருச்செந்தூர் கோவிலில் உண்டியல் மூலம் ரூ.4.26 கோடி வருவாய்: தங்கம் 1 கிலோ 279 கிராம் கிடைத்தது



“திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் உண்டியல் வருமானம் மாதந் தோறும் எண்ணப்படு கிறது. இந்த நிலையில் நவம்பர் மாத உண்டியல்கள் எண்ணும் பணி செவ்வாய் மற்றும் புதன்கிழமை நடை பெற்றது. தக்கார் அருள்முருகன் தலைமை வகித்து, உண்டியல் எண்ணும் பணியை பார்வையிட்டார். இணை ஆணையர் ராமு முன்னிலை வகித்தார். இந்து சமய அறநிலையத்துறை முதுநிலை கணக்கு அலுவலர் ராஜாராமன், உதவி ஆணையர்கள் செந்தில்குமார், ஆறுமுகம், நாகவேல், கண்காணிப்பாளர் கோமதி, ஆய்வர் செந்தில்நாயகி, தக்காரின் நேர்முக உதவியாளர் செந்தமிழ்பாண்டியன், பொதுமக்களின் பிரதிநிதிகள் வேலாண்டி, மோகன், கருப்பன் உள்ளிட்டோர் இந்த பணியில் கலந்து கொண்டனர். உண்டியல் எண்ணும் பணியில் அயற்பணி மற்றும் கோவில் பணியாளர்கள் ஈடுபட்டனர். அதன்படி உண்டியல் எண்ணிக்கையில் ரூ.4 கோடியே 26 லட்சத்து 22 ஆயிரத்து 507, (ரூ.4,26,22,507), தங்கம் 1 கிலோ 279 கிராம், வெள்ளி 30 கிலோ 857 கிராம், பித்தளை 46 கிலோ 312 கிராம், செம்பு 7.77 கிலோ, தகரம் 8.91 கிலோ மற்றும் வெளிநாட்டு கரன்சிகள் 1421ம் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியிருந்தது தெரிய வந்தது. வெள்ளி செயின்: உண்டியல் எண்ணிக்கையில் பக்தர் ஒருவர் காணிக்கையாக செலுத்தியிருந்த முருகர், விநாயகர், அம்மன் உருவம் பொறித்த 54 வெள்ளி நாணயங்கள் கோர்த்த இரண்டு அடுக்கிலான காசுமாலை ஒன்றும் இருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் SIR குறித்து கள ஆய்வு மேற்கொண்ட எம்பி.



சேலம் மேற்கு மாவட்டம் மேச்சேரி கிழக்கு ஒன்றியம்,ஓலைப்பட்டி ஊராட்சி சின்ன ஓலைபட்டியில் பூத் எண் 314 ல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்ட போது(ஙிலிளி)வாக்குச்சாவடி அலுவலர்கள் ஷிமிஸி படிவத்தை வீடு வீடாக வழங்குவதை நேரில் ஆய்வு செய்து BLA-2 கழக பாக நிலை முகவர்களிடமும்,நிர்வாகிகளிடமும் Enumeration படிவத்தை நிரப்புவது குறித்து பயிற்சி வழங்கி தெளிவுபட எந்தெந்த வாக்காளர்களுக்கு எவ்வாறு படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என விரிவாக விளக்கங்களை அளித்த சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி.



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை சேலம் மாவட்டம், ஏற்காடு சட்டமன்ற தொகுதி, பேளூர் பேரூராட்சி பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

# திருவாரூரில் ரூ.50 கோடியில் ஆடை உற்பத்தி அலகு அமைக்கும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் முன்னிலையில் கையெழுத்து

சென்னை: நவ.14–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் நேற்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், திருவாரூர் மாவட்டத்தில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் 2500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், SCM Garments பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்) ஆடை உற்பத்தி அலகு அமைக்கும் திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.





தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து, அனைவரையும் உள்ளடக்கிய சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்பதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், திருவாரூர் மாவட்டத் தில், இந்த திட்டம் நிறுவப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது. SCM Garments பிரைவேட் லிமிடெட் ஜவுளித் துறையில் முன்னணி நிறுவனமாக விளங்கும் SCM Garments குழுமத்தின் துணை நிறுவனமான SCM Garments பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்), உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களை வாடிக்கையாளர்களாகக் கொண்ட ஆடைகள் தயாரிக்கும் நிறுவனமாகும்.

இந்நிறுவனம், 50 கோடி ரூபாய் முதலீட்டில் 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், திருவாரூர் மாவட்டத்தில் ஆடை உற்பத்தி அலகு அமைத்திட திட்டமிட்டுள்ளது. முதலமைச்சர் முன்னிலையில் இன்றையதினம், இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர், நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் பு. அலர்மேல்மங்கை, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் கே.எம். சுப்ரமணியன், ஷிசிவி நி ணீ கூஹீ னீ மீ ஸீ மீ வ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.பி.கே. பரமசிவம், செயல் இயக்குநர் கௌசிக் குமரன், திட்ட மேலாளர் ஸ்ரீநிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பயறு வகை உற்பத்தி அதிகரிக்க விவசாயிகளுக்கு கான பயிற்சியை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான வேளாண் இடைப்பொருட்களை விவசாயிகளுக்கு வழங்கினார்

விழுப்புரம், நவ. 14–

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் விவசாயிகளுக்கு தனி நிதி நிலை அறிக்கையை உருவாக்கி விவசாயிகளுக்கு எண்ணற்ற திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்தி வருவதாக பயறு வகை உற்பத்தி அதிகரிக்க விவசாயிகளுக்கு கான பயிற்சியை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான வேளாண் இடைப்பொருட்களை விவசாயிகளுக்கு வழங்கினார் .



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த வல்லம் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய வளாகத்தில் பயரு வகை பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்கும் தொழில் நுட்பங்கள் குறித்தும், மண்வளப் பாதுகாப்பு குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

வல்லம் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க வைய வளாகத்தில் நடைபெற்ற இப்பயிற்சியில் வல்லம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சரவணன் அனைவரையும் வரவேற்றார்.வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தார். விழுப்புரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன் தலைமை வகித்து உளுந்து, பனிப்பயறு ஆகிய பயிர்களில் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துவது குறித்தும் உற்பத்தியை அதிகரிக்க அரசு வழங்கி வரும் திட்டங்கள் குறித்தும் எடுத்துக் கூறினார், வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் விஜயகீதா உழவியல் தொழில் நுட்பங்கள் குறித்தும் , கஸ்குட்டா எனப்படும் மஞ்சள் கொடி களை கட்டுப்பாடு குறித்தும் பேசினார் .

விழாவில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு ரூபாய் 60,000 மதிப்பிலான வேளாண் விதைத் தெளிப்பான்கள், உளுந்து விதைகள், தார்ப்பாய்கள், மரக்கன்றுகள் உள்ளிட்ட இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில்:

இந்தியாவில் பிற மாநிலங்களில் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் தான் திராவிட மாடல் ஆட்சியில் வேளாண் துறைக்கு என தனி நிதி நிலை அறிக்கை அறிவித்து வேளாண்மை துறை சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் ஆட்சியில் விவசாயிகளுக்கு இலவச மின்சார திட்டம் விவசாயிகளின் கடன் தள்ளுபடி போன்ற திட்டங்களை செயல்படுத்தினார் அவர் வழியில் ஆட்சி செய்யும் தமிழ்நாடு முதலமைச்சர் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு திட்டத்தை வழங்கி உள்ளார். மேலும் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு வேளாண் திட்ட பலன்கள் சென்றுள்ளது ,வேளாண் உற்பத்தியை புதிய தொழில்நுட்பங்களையும், தரமான விதைகளையும், மானிய திட்டங்களையும் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்துமன்வளம் குறித்தும் மண் மாதிரிகள் எடுப்பது குறித்தும் அதன் அவசியம் குறித்தும் வேளாண்மை அலுவலர் முருகன் எடுத்துக் கூறினார்.

நிகழ்ச்சியில்தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை,மொடையூர் துரை,இளம்வழுதி, கால்நடை உதவி இயக்குனர் தண்டபாணி, தோட்டக்கலை உதவி இயக்குனர் கௌதமன், நிர்வாகிகள் தமிழரசன், பாண்டியராஜன், ரவிச்சந் திரன், லட்சுமணன், பழனி, கார்வண்ணன், வேளாண்மை விற்பனை துறைஉதவிவேளாண்மை அலுவலர் திலகவதி, இளநிலை பொறியாளர் தணிகைவேல், துணை வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜ், பட்டு வளர்ச்சி துறை ஆய்வாளர் கௌரி, உள்ளிட்ட துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி மேலாண்மை அலுவலர்கள் தமிழரசி, ஜீவா ,வாசமூர்த்தி, அபிராமி,மஞ்சு ,மீனாட்சி, உமா ஆகியோர் செய்திருந்தனர் . நிகழ்ச்சியில் விவசாய சங்க பிரதிநிதிகள், முன்னோடி விவசாயிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

வட்டார தொழில் நுட்ப மேலாளர் சுபாஷ் சந்திர போஸ் நன்றி கூறினார் .

# சிதம்பரம் சிவகாமசுந்தரி அம்மன் கோயில் தேரோட்டம் கோலாகலம்



கடலூர்: நவ.14–

சிதம்பரம் சிவகாமசுந்தரி அம்மன் கோயில் தேரோட்டம் கோலாகலமாக நடைபெற்றது. சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோயில் சிவகங்கை மேற்குகரை யில் அமைந்துள்ள திருக்காமக்கோட்டம் என்ற ஸ்ரீசிவகாமி அம்மன் கோயிலில் ஐப்பசி பூர உற்சவத்திற்காக கர்நாடக மாநிலம் மங்களூரைச் சேர்ந்த பக்தர்களான ராமதாஸ் பத்ரி அட்டாவர், சூர்யகிரண் அட்டாவர் ஆகியோர் நிதிபங்களிப்பில் புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில் சாஸ்தா கலைக்கூடத்தில் சிவகாமி அம்மனுக்காக சுமார் 21 அடி உயரத்தில் புதிய தேர் தயார் செய்யப்பட்டு செவ் வாய்க்கிழமை அன்று சிதம்பரம் நகருக்கு கொண்டு வரப்பட்டு கட்டளை தீட்சிதர் எஸ்.வி.கனக சபாபதி தீட்சிதர் மற்றும் அவரது சகோதரர்கள் முன்னிலையில் கோயில் பொது தீட்சிதர்களின் செயலாளர் த.சிவசுந்தர தீட்சிதரிடம் ஒப்படைக்கப்பட்டது.

புதிய தேருக்கு புதன் கிழமை இரவு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு நான்கு வீதிகளில் வெள்ளோட்டம் விடப்பட்டது. இந்த புதிய தேரில் நவ.13ம் தேதி வியாழக்கிழமை நடைபெறும் சிவகாமி அம்மன் கோயில் ஐப்பசி பூர உற்சவத்தின் தேரோட்டம் நிகழ்ச்சியில் சிவகாமசுந்தரி அம்பாள் வீதிவலம் வருகிறார். சிவகாமி அம்மன் கோயில் ஐப்பசி பூர உற்சவம் நவ. 5ஆம் தேதி கொடியேற்றத் துடன் தொடங்கியது. நவ.13ம் தேதி திருத்தேர் உற்சவமும், மாலை யாகசாலை பூஜை தொடங்கப்பட்டு, அம்பாளுக்கு லட்சார்ச்சனையும் நடைபெறுகிறது. நவ.14 ம் தேதி பட்டு வாங்கும் உற்சவமும் மற்றும் பூரச்சலங்கை உற்சவமும், உற்சவ அம்பாளுக்கும் மகாபிஷேகம் மற்றும் மகாதீபாராதனையும் நடைபெறுகிறது.

நவ.15ம்ம் தேதி இரவு ஸ்ரீ சிவானந்தநாயகி சமேத ஸ்ரீ சோமாஸ்கந்தர் திருக்கல்யான உற்சவமும் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை கோயில் பொது தீட்சிதர்கள் செய்துள்ளனர்.

# பழனி முருகன் கோவிலில் ரோப் கார் சேவை நிறுத்தம்",

"பழனி, நவ.14–

உலக புகழ்பெற்ற பழனி முருகன் கோவில், மலை மீது அமைந்துள்ளது. அடிவாரத்தில் இருந்து கோவிலுக்கு செல்ல படிப்பாதை, யானைப்பாதை பிரதான வழிகளாக உள்ளன. இதுதவிர பக்தர்கள் மலைக்கோவிலுக்கு எளிதில் சென்றுவர ரோப்கார், மின்இழுவை ரெயில் ஆகிய சேவைகள் பயன்பாட்டில் உள்ளது. இதில் ரோப்கார் வழியாக விரைவாகவும். பழனி மலையின் இயற்கை அழகை பார்த்து ரசித்தபடியும் செல்லலாம் என்பதால் பெரும்பாலானோர் ரோப்காரில் செல்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். மேலும் இந்த ரோப்கார் சேவை பக்தர்களுக்கு சிறந்த சுற்றுலா அனுபவத்தை கொடுக்கிறது. பழனி ரோப்கார் நிலையத்தில் பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மாதாந்திர, வருடாந்திர பராமரிப்பு பணி நடைபெறுவது வழக்கம். அப்போது ரோப்கார் சேவை நிறுத்தப்பட்டு பணி மேற்கொள்ளப்படும். அதன்படி பழனி முருகன் கோவில் ரோப்கார் நிலையத்தில், பராமரிப்பு பணிகள் காரணமாக இன்றும், நாளையும் ரோப் கார் சேவை இயங்காது என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. எனவே பக்தர்கள் மின்இழுவை ரெயில், படிப்பாதையை பயன்படுத்தி மலைக்கோவிலுக்கு செல்லலாம் என்று கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ",

# பயங்கரவாத அச்சுறுத்தல்; தமிழகத்திற்கு தனி கவனம் செலுத்த வேண்டியது அவசியம் : அண்ணாமலை

"கோவை, நவ.14–

தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை இன்று கோவை மாவட்டம் நீலம்பூரில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். சமீபத்தில் டெல்லியில் நடந்த கார் வெடிப்பு சம்பவம் தொடர்பாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோது அவர் கூறியதாவது; "தமிழகத்தின் பொருளாதார ஆற்றல் காரணமாக, மற்ற மாநிலங்களை விட தமிழகத்திற்கு பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகம். பொருளாதாரத்தில் மற்ற மாநிலங்களை விட நாம் முன்னிலையில் இருக்கிறோம். சென்னை, கோவை உள்ளிட்ட பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் பயங்கரவாதிகளை ஈர்க்கும் இலக்குகளாக இருக்கும். இந்தவிஷயத்தில் அரசியல் கட்சிகள் தங்கள் சித்தாந்தங்களை தாண்டி ஒன்றிணைந்து இருக்க வேண்டும். தமிழகத்தை பொறுத்தவரை பயங்கரவாத அச்சுற்றுதல் விவகாரத்தில் முதல் அமைச்சர் தனி கவனம் செலுத்த வேண்டியது அவசியம். சிறப்பான அதிகாரிகள் எப்போதும் கண்காணிப்பு பணியில் இருக்க வேண்டும். அப்போதுதான் நீங்களும், நானும் பாதுகாப்பாக



இருக்க முடியும். காஷ்மீர், டெல்லி உள்ளிட்ட பகுதிகள் பாகிஸ்தானுக்கு அருகில் இருக்கின்றன. டெல்லியில் நடந்த கார் வெடிப்பு சம்பவத்திற்கு புல்வாமாவுடன் நேரடியாக தொடர்பு இருக்கிறது. நாம் பாகிஸ்தான் எல்லையை விட்டு வெகு தூரத்தில் இருக்கிறோம். சர்வதேச எல்லை என்றால் இலங்கையை தவிர வேறு யாரும்இல்லை.டெல்லிக்கு இருக்கும் அச்சுறுத்தல் சென்னைக்கு இல்லை என்றாலும் கூட, மற்ற மாநிலங்களை விட அதிக கவனத்துடன் இருக்க வேண்டிய அவசியம் தமிழகத்திற்கு இருக்கிறது." இவ்வாறு அவர் தெரிவித்தார்.",

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA**, printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421